**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 60,603,536 தொகையான 09 மோட்டார் வாகனங்கள், கிரயம் ரூபா 29,840,484 தொகையான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் கிரயம் ரூபா 1,157,589 தொகையான அலுவலக உபகரணங்கள் என்பன தற்போதும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ஆய்வுகூட மற்றும் அலுவலக உபகரணங்களை ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலம் அகற்றி கணக்கு ஏடுகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 117 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கற்பனைச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் அல்லது பெறுமானத் தேய்வு விகிதம், பயன்தரு ஆயட்காலத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்ற முறை என்பன காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 12,337,058 கிரயமான கணனி மென்பொருட்கள் (Computer Software) தொடர்பாக அந்த தேவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் அந்த விகிதம் தனித்தனியாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நியமத்தில் குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்களில் இருந்து பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 3,977,204 தொகையான வருமானம் மற்றும் பொறுப்பாக சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாத பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இனங்காணப்படாத அனுப்புதல்களை கண்டறிவதற்காக மக்கள் வங்கிக்கு விபரங்களை கோரி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், வங்கியும் அந்த தரவுகளை வழங்குவதற்கு தவறியிருந்தது. | பிரதான அலுவலகத்திற்கு கிடைக்கின்ற அனுப்புதல்களை இனங்காண்பதற்கான முறைமையொன்று தயாரித்து அந்த அனுப்புதல்களை சரியாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டிருந்த கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி முறையே ரூபா 7,966,743 தொகை மற்றும் ரூபா 4,448,125 ஆக இருந்ததுடன், அந்த மீதி உரிய கணக்குகளில் பதிவழிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ஏனைய செலவின கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் ஏனைய செலவினங்கள் ரூபா 3,528,282 இனால் அதிகரித்தும், ஆண்டின் இலாபம் அப்பெறுமதியால் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுகளில் கொள்வனவு செய்வதற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலவினமாக பதியப்படாமல் சொத்தாக பிழையாக பதியப்பட்டமை இந்த ஆண்டின் போது சரிசெய்யப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகளுக்குரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரியாக பல வருட காலத்தில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,016,209 மீதியொன்று 2020 திசெம்பர் 31 ஆம் திகதி உப ஒப்பந்தகாரரின் கொடுப்பனவு கணக்கில் செலவினம் ஒன்றாக சீராக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் | பெறுமதி சேரி வரி செலவினமாக பதியப்பட வேண்டியிருந்த போதிலும் தவறுதலாக சொத்தாக பதியப்பட்டிருந்தது. அது இந்த ஆண்டின் போது சரிசெய்யப்பட்டுள்ளது. | பெறுமதி சேர் வரி பெறுமதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் அப்பெறுமதியால் அதிகரித்தும், இலாபம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் 30 வருட வாடகை அடிப்படையில் ரூபா 7,965,000 தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தி காணி பெறப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையே வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அந்த காணியின் சட்ட ரீதியான உரித்தை நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் காணியின் பெறுமதியான ரூபா 7,965,000 தொகை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதற்காக வாடகை உடன்படிக்கை தயாரிக்கப்படுகின்றது. எனினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் விநியோகிக்கப்பட்ட காணி கையளித்தல் கடிதமும் உள்ளது. | நிறுவனத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையே வாடகை ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட காலக் கழிவு அளவான ரூபா 51,153,455 தொகை வருமானம் மூலத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட பெறுமானத் தேய்வு அளவு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அரச மானிய கணக்குகளை வைத்தல் SLPSAS 11 இன் பிரகாரம் மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். |
| (ஊ) | உரிமை மாற்றல் கூற்றில் சொத்துக்கள் கைப்பற்றல்களாக ரூபா 2,264,498 இனங்காணப்படாத மீதியொன்று முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், அதற்கான தகவல்கள் | உரிமை மாற்றல் கூற்றில் சொத்து கைப்பற்றல்களாக ரூபா 2,264,498 இனங்காணப்படாத மீதியொன்று முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன், அது | இனங்காணப்படாத மீதிகளை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது வருமானக் கூற்றில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன் அடிப்டையில் சேவை வழங்குதல் நிறுவனத்தின் கொள்கை அல்லாத போதிலும், கடனுக்கு சேவையினை வழங்கியமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 62,155,575 தொகையான கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன், அது 2014 முதல் 2020 வரையான காலத்திற்கு உரியதாகும். | ரூபா 5.2 மில்லியன் தொகை நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து கிடைக்காதிருந்தமையினால் பதிவழிப்பதற்கு கடன் சேகரிக்கும் குழு பரிந்துரை வழங்கியிருந்தது. அந்த பரிந்துரை எதிர்வரும் உள்ளக முகாமைத்துவ குழு கூட்டத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>எஞ்சிய கடன் மீதிக்காக Letter of Demand அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சட்ட ரீதியான நடவடிக்கைககள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கடனை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று ஈடுபடுத்த வேண்டியதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ஒப்பந்தகாரர்களுக்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ரூபா 118,236,114 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தொகையில் இருந்து ரூபா 96 மில்லியன் தொகை புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காகவும், ரூபா 5.5 மில்லியன் தொகை புதிய கணனி முறைமைக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த பணிகள் முடிவடைந்த பின்னர் அந்த தொகை சொத்துக் கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எஞ்சிய தொகையும் ஒவ்வொரு பணிகளின் இறுதியின் போதும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள முற்பணத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பெறுமதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | | |
| (அ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | செயல் நிமித்த உப கட்டுநிதி பெற்ற உத்தியோகத்தர் களினால் பணிகள் நிறைவு பெற்றவுடன் உடனடியாக முற்பணம் தீர்க்க வேண்டியிருந்த போதிலும், 54 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்காக 32 நாட்கள் முதல் 102 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | 1,182,500 | விசேட முற்பணங்களில் அநேகமானவை வேலைத்தளங்களில் மேற்கொள்ளப்படுகின்ற செலவினங்களை தீர்த்து வைப்பதற்காகவே வழங்கப்படுகின்றது. இந்த வேலைத்தளங்களில் அநேகமானவை பிரதான அலுவலத்தில் இருந்து தூர இடத்தில் உள்ளவையாகும். அதனால் 14 நாட்களுக்குள் தீர்த்து வைத்தல் பிரயோக நடைமுறையில் பிரச்சினைக்குரியதாக இருந்தது. | தாமதம் இன்றி முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.22 ஆம் பிரிவு | இடரைக் குறைக்கும் 02 செயற்திட்டத்திற்காக தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் போது 21 நாட்கள் ஆகக் குறைந்த கால எல்லையாக இருக்க வேண்டிய போதிலும், அதற்காக 16 நாட்கள் | 61,845,848 | நாட்டில் காணப்படுகின்ற கொரோன தொற்று நிலைமையினால் செயற்திட்டங்களில் ஏற்பட்ட தாமதத்தை தவிர்ப்பதற்காக செயற்திட்டத்தை விரைவுபடுத்தும் போது மேற்கூறப்பட்ட நாள் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிராகரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மாத்திரமே வழங்கப்பட்டிருந் தது. | | | |
| (இ) | 2019 யூன் 18 ஆம் திகதிய NBRO/AD/2019/132 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதம். | முன்னர் பெறப்பட்ட முற்பண தொகையை தீர்க்கும் வரை முற்பணம் வழங்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டி ருந்தும், முன்னர் பெறப்பட்ட முற்பண தொகை தீர்க்கப்படாதிருக் கும் போது மீண்டும் முற்பணம் வழங்கப்பட்டிருந் தது. | 28,145 | விஷேட முற்பணங்களில் அநேகமானவை வேலைத் தளங்களில் மேற்கொள்கின்ற செலவினங்களை தீர்ப்பதற்காக பெறப்பட்டதாகும். இந்த வேலைத்தளங்கள் அநோகமானவை பிரதான அலுவலகத்தில் இருந்து தூர வெளியிடங்களில் உள்ளவையாகும். அதனால் 14 நாட்களுக்குள் தீர்த்து வைத்தல் பிரயோக ரீதியில் பிரச்சினைக்குரியதா க இருந்தது, | முற்பணத்தை உரிய கால எல்லையில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 19 ஆம் திகதிய DMS/1508 vol viii ஆம் இலக்கம் மற்றும் 2017 இன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம். | மண்சரிவு அபாயத்தை குறைக்கும் ஆலோசனை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற் காக 33 உத்தியோகத்தர் களுக்கு சுற்றறிக்கை ஆலோசனைகளு க்கு முரணாக சம்பளம், ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்பட்டிருந் தது. | 11,126,348 | இந்த செயற்பாடுகளுக்கா க விஷேடமான நபர்களை வெளியில் இருந்து ஆட்சேர்ப்பதாயின் அதற்காக கணிசமான சம்பளமொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டமையினால் இந்த கொடுப்பனவுகள் செய்யப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 30,169,666 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 55,239,903 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 25,070,237 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் மிகை ரூபா 9,165,576 இனாலும், மனித குடியிருப்பு திட்டம் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் மிகை ரூபா 3,185,800 இனாலும், கட்டிட ஆராய்ச்சி பிரிவின் மிகை 1,155,671 இனாலும், பூகோள தொழில்நுட்ப மற்றும் பொறியியல் பிரிவின் மிகை ரூபா 9,237,577 இனாலும், சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவை பிரிவின் ரூபா 2,492,502 இனாலும் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

#### 2.2.1 ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் மிகையினை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரித்தமை அல்லது வீழ்ச்சியடைந்தமை.

மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவின் மிகையினை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் 12 சதவீத முன்னேற்றமாக இருந்ததுடன், சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவை, பூகோள தொழில்நுட்ப மற்றும் பொறியியல், செயற்திட்ட முகாமை, மனித குடியிருப்பு திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் கட்டிட பொருட்களின் ஆராய்ச்சி போன்ற பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் முறையே ரூபா 28, 64, 96, 77, 69 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்திற்காக சட்ட ரீதியான நிலைமையை கையளிப்பதற்கான சட்டமொன்றை தயாரிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு 2012 செப்டம்பர் 10 ஆம் திகதி சட்ட வரைவுகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். | விரைவாக சட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் கட்டிடங்களை நிர்மாணித்தல் தொடர்பாகவும், அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் மண்சரிவு ஆபத்தின் மதிப்பீட்டு அறிக்கைக்கான 1,168 விண்ணப்பங்களுக்காக பரிந்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அது கிடைத்த மொத்த மதிப்பீட்டு அறிக்கை விண்ணப்பங்களில் 13.6 சதவீதம் ஆகும். | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட Covid - 19 தொற்று நோயின் காரணமாக வெளிக்கள நடவடிக்கைகள் உரிய பிரகாரம் செய்ய முடியாதிருந்தது. அதன் காரணமாக கிடைத்த LAB/LAD 8,542 கோரிக்கைகளில் 1,168 இற்கு அறிக்கை வழங்க முடியாதிருந்தது. | கட்டிட நிர்மாணத்திற்காக காணியினை பரீட்சித்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்க ாக கிடைத்த விண்ணப்பங்களை பரீட்சித்து விரைவாக பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது மண்சரிவு ஆய்விற்காக 7,879 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன், அதில் 3,717 விண்ணப்பங்களுக்காக அறிக்கை வழங்கப்பட்டிருந்துடன், மீளாய்வாண்டின் போது மண்சரிவு ஆய்விற்காக கிடைத்த 4,162 விண்ணப்பங்களுக்கு பரிந்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. அது ஆண்டில் பரிந்துரை வழங்குவதற்காக கிடைத்த விண்ணப்ப அளவில் 52.8 சதவீதத்தை கொண்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட Covid - 19 நோய் நிலைமையின் காரணமாக வெளிக்கள நடவடிக்கைகள் சரியான பிரகாரம் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | மண்சரிவு ஆய்வு விண்ணப்பங்களுக்க ாக களப்பரிசோதனை மேற்கொண்டு விரைவாக பரிந்துரைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சமூக அடிப்படை இடர்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காகவும், மண்சரிவு அபாயங்களை இனங்காணும் முறைமைகளுக்காகவும் கிடைக்கப் பெற்ற ரூபா 8 மில்லியன் தொகை மற்றும் மண்சரிவு அபாயங்களை குறைப்பதற்கான பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற ரூபா 5 மில்லியன் தொகை என்பன | எதிர்காலத்தில் இந்த பணத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மானியம் மற்றும் நிதிஏற்பாடுகள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பயன்படுத்தப்படாதிருந்ததுடன், மண்சரிவு அபாயத்தை குறைக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 97.25 மில்லியனில் ரூபா 11.89 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தின் புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூட கட்டிடம் என்பவற்றின் நிர்மாணங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் 240 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 1066 நாள் காலம் கடந்திருந்த போதிலும், தாமதக் கட்டணம் 3,650,000 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆற்றப்பட்ட வேலை அறிக்கையின் பிரகாரம் ரூபா 51,730,418 பெறுமதியான வேலைகள் புதிதாக நிறைவேற்றப்பட்டிருந்ததுடன், ரூபா 63,927,288 பெறுமதியான வேலை திட்டங்களில் வேலைகள் திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் உத்தியோகத்தர்களின் தாமத வழுக்களின் காரணமாக ரூபா 13,271,473 தொகை மேலதிகமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்தமைக்கு ஒப்பந்தகாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல்வேறு காரணங்களும் தாக்கமளித்திருந்தது. | கட்டிடத்தின் நிர்மாணங்கள் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 386 ஆக இருந்த போதிலும், சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் 424 பேர் ஆகும். அதில் 98 ஊழியர்கள் நிரந்தர பதவியணியினருக்கு உரித்தற்ற உத்தியோகத்தர்கள் ஆக இருந்ததுடன், பதவியணியினரில் 62 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 386 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சேவையில் ஈடுபட்டிருக்கின்ற நிரந்த ஊழியர்களுக்கு மேலதிகமாக நிறுவனத்திற்கு சந்தர்ப்பத்திற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்ற விஷேட ஆலோசனை சார்ந்த | உரிய அங்கீகாரத்தை பெற்று ஆட்சேர்ப்பு நடைமுறையில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஊழியர்களை சேர்த்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வேலைகளுக்காக அந்த பணிக்கு வரையரையுடன் அவ்வப்போது அமைய அடிப்படையில் ஊழியர்களை சேர்க்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | |

**3.6 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ளும் போது ஓடப்பட வேண்டிய ஆகக் குறைந்த தூரம் பயன்படுத்தக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 34 சந்தர்ப்பங்களின் போது ரூபா 599,512 தொகை நிறுவனத்திற்கு மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | கேள்வி உடன்படிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்த கிலோ மீற்றர் எண்ணிக்கைக்கு குறைவாக ஓடியிருந்த போதிலும், உடன்படிக்கை செய்யப்பட்ட ஆகக் குறைந்த கிலோ மீற்றர் எண்ணிக்கைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகள் நிறுவனத்திற்கு சாதகமான நிலைமைக்கு உட்பட்டு பல்வேறு நடவடிக்கைகளை பின்பற்றி வாகனங்களை குறைவாக பயன்படுத்துதலை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் போது ஓடப்பட வேண்டிய ஆகக் குறைந்த தூரத்தை பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |